## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப் பழியுள்ள அபிப்பிராயம்

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லா விட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக் கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை மாற்ற வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்களை சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 06 பட்டப்பின் படிப்பு பாடநெறி களுக்குரிய பாடநெறிகளை பூர்த்தி செய்வதற்கு வழங்கப்பட்டுள்ள ஆகக் கூடிய கால எல்லைக்குள் கிடைக்காமல் இருந்த ரூபா 6,002,022 ஆன பாடநெறிக் கட்டண வருமானம் நிறுவனத்தின் வருமான கொள்கையின் பிரகாரம் பதிவழித்தல் மேற்கொள்ளாமல் பெற வேண்டிய பாடநெறிக் கட்டணங்களாக நிதி நிலைமை கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட காரணத்தால் பெறவேண்டிய பாடநெறி கட்டண வருமானம் அந்த அளவினால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டு புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கிட்டு கொள்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் | பாடநெறிகளை பூர்த்தி செய்ய வேண்டிய ஆகக்கூடிய கால எல்லையை மிகைத்திருந்த எனினும் பாடநெறிகளை பூர்த்தி | 2024 ஆம் ஆண்டில் உரிய பணத்தை அரசின் வருமானத்துக்கு | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்க |

| | | | |
|---|---|---|---|
| பிரமாணம் 570 மற்றும் 571 | செய்யாத மாணவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,605,260 ஆன மீளச் செலுத்த வேண்டிய நூலக வைப்புகளை மீள செலுத்துவதற்கு அல்லது அரசின் வருமானத்துக்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலவு வைக்க நடவடிக்கை எடுப்பதாக | எடுத்தல் வேண்டும். |

(ஆ) சுற்றறிக்கைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| i. | 2015 நவம்பர் 17 ஆந் திகதிய 15/2015 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தாபன சுற்றறிக்கை | உயர் கல்வி நிறுவனங்களில் உள்ளக பரீட்சைகளை நடத்தி 03 மாதங்களுக்குள் பெறுபேறுகளை வழங்க வேண்டிய போதிலும் நிறுவகம் கடந்த 03 ஆண்டுகளாக பரீட்சைகளை நடத்தி பெறுபேறுகளை வழங்குவதற்கு 04 மாதங்கள் முதல் 12 மாதங்கள் வரையான காலம் எடுக்கப்பட்டிருந்தது | கொவிட் தொற்று நிலைமை மற்றும் காணப்பட்ட பொருளாதார சிக்கல் காரணமாக நிகழ்நிலை ஊடாக பரிட்சை நடத்தப்பட்டதன் பேரில் பெறுபேறுகளை வழங்குவதற்கு தாமதமானதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| ii. | 2018 மே 18 ஆந் திகதிய UGC/L/2020 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கடிதம் | அனைத்து பட்டப்பின் படிப்பு நிறுவனங்களின் முகாமைத்துவ சபையின் மொத்த அங்கத்துவம் அதிகபட்சமாக 11 உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் 35 பேருடன் கூடிய முகாமைத்துவ சபையொன்று நியமிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக, 2019 சனவரி முதல் 2023 திசெம்பர் 31 வரையிலான காலப் பகுதியில் முகாமைத்துவவ சபைக் கூட்டங்களுக்காக மொத்தம் ரூபா 1,986,000 ஆன மேலதிக செலவினமொன்று செலவிடுவதற்கு நேர்ந்திருந்தது. | முகாமைத்துவ சபை அங்கீகாரத்தைப் பெற்று திருத்தம் செய்யும் வரை தற்போது காணப்படும் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 94,454,441 மிகையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 59,017,772 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 35,436,669 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு சுயநிதியிடல் உள்ளக வருமான செயற்பாட்டு வருமானம் ரூபா 12,696,448 ஆலும் ஏனைய வருமானம் ரூபா 32,282,760 ஆல் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) நிறுவனத்தினால் செயல்படுத்தப்படுகின்ற 07 பட்டப்பின் படிப்பு பாடநெறிகளுக்காக 2020 ஆம் ஆண்டு முதல் இதுவரை எந்தவொரு மாணவர் ஒருவரும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த பாடநெறிகளுக்கு உரிய போதுமான விண்ணப்பங்கள் கிடைக்காமை காரணமாக செயல்படுத்த முடியாமல் இருப்பதாக | உயர் இயலளவுடன் மாணவர்களை பதிவு செய்வதற்கு முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும் |
| (ஆ) 36 மாணவர்களிடமிருந்து பெற வேண்டியிருந்த ரூபா 854,574 ஆன நிலுவை பாடநெறி கட்டணங்களை அறவிடாமல் இறுதிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப் பட்டிருந்ததுடன் 12 மாணவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 255,500 ஆன நிலுவை பாடநெறி கட்டணத்தை அறவிடாமல் அவர்களுக்கு பட்டப்படிப்பு சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. | முகாமைத்துவ சபைக்கு அறிவிக்கப்பட்டு எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாக | பாடநெறி கட்டணங்கள் விரைவில் அறவிடப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யும் போது நிதி நிறுவனங்களிடமிருந்து வட்டி விகிதங்கள் தொடர்பாக விலை விபரங்கள் கோராமல் சந்தை வட்டி விகிதங்களில் உள்ள விலகல் பற்றி முன்னெச்சரிக்கை யாக நடவடிக்கை எடுக்காமல் அதே வங்கிகளில் சுயமாக புதுப்பிக்கப்பட்டதால் 2022/2023 ஆம் ஆண்டில், நிறுவனத்திற்கு ஈட்டக் கூடியதாக இருந்த ரூபா 7,226,709 ஆன வட்டி வருமானமொன்று நிறுவனம் இழந்திருந்தது. | மாதாந்த பணத் தேவையை நிறைவேற்றுவதற்கு முடியுமான வகையில் மாதாந்தம் நிலையான வைப்புக்கள் முதிர்வடையும் பிரகாரம் உரிய பெறுகைகளுக்கு இணங்க மாதாந்த அடிப்படையில் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டதாக | நிறுவத்திற்கு ஆகக்கூடிய நலன்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் முன்னெச்சரிகை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்தம் ரூபா 1,495,212 ஆன 37 பொருள் உருப்படிகள் பயன்படுத்தப்படாமல் விளைவற்றும் குறைப்பயன்பாட்டுடனும் காணப்பட்டன. | குறித்த பொருட்களை 2024 ஆம் ஆண்டில் வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பொருள் மெய்மையாய்வு சபை பரிந்துரைகள் செயற்படுத்தப்பட வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் மின்பிறப்பாக்கி இயந்திர அறையின் நிர்மாணத்திற்காக 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 1,310,562 ஆன மதிப்பீடு ஒன்று தயாரிக்கும் போது கட்டிட அளவுப்பத்திர விலை விபரங்கள் பின்பற்றப்படாமல் இருந்ததுடன் நிர்மான நடவடிக்கைகள் 2023 ஆம் ஆண்டு வரை தாமதித்த காரணத்தினால் ஆரம்ப மதிப்பீட்டின் மூன்று மடங்கு அதாவது ரூபா 3,909,538 தொகை செலவிடுவதற்கு நேர்ந்திருந்தது பல்கலைக்கழகத்தினுள் மிகக் குறைந்த கிரயத்தின் கீழ் இத்தகைய மின் பிறப்பாக்கி இயந்திர அறை நிர்மாணிக்கப்பட்டு இருக்கையில் தேவைப்பாட்டை திட்டவட்டமாக இனங் கண்டு நடவடிக்கை எடுக்காமை காரணமாக சிக்கனமற்ற செயற்பாடு ஒன்றிற்காக ரூபாய் 2,598,976 தொகை கூடுதலாக செலவிடுலதற்கு நேர்ந்திருந்தது | மின் பிறப்பாக்கி இயந்திர அறை நிர்மாணம் 2022 மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன் இக்காலப் பகுதியில் கட்டிடத்தை அண்மித்த செலவினங்களில் கருத்தில் கொள்ளக் கூடிய அளவு அதிகரித்து இருந்ததாக | நிதியத்தை உயர் செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடமைப் தேவைப்பாட்டின் பேரில் அங்கீகரிகரிக்கப்பட்ட பதவியணியினை திருத்தம் செய்யாமல் அங்கீகரிகரிக்கப்பட்ட பதவியணியினை மிகைத்து ஒப்பந்த அடிப்படையில் 26 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு மீளாய்வாணடில் ரூபா 6 791 161 தொகை சம்பளம் மற்றும் படிகளாக வழங்கப்பட்டிருந்தன. | ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட பதவியணியினரின் பதவிகளுக்காக பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக | பதவியணியினை அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்குள் பேணி செல்லப்பட வேண்டும் |